OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

**இப்பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாக காணப்படும் கீழ்வரும் பதவிகளுக்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 01) புத்தகம் கட்டுனர் கீழ்நிலைத் தரம் [U-MT 1(II)]

தகைமை : க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாதவாறு ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் அச்சக புத்தகங்கள் கட்டும் பிரிவில் புத்தகங்கள் தொடர்பாக பத்து (10) வருடங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு : பிரயோக பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 02) தொழிநுட்ப அதிகாரி (ஒலியொளி) தரம் III [U-MT 1(III)]

தகைமைகள் (i) க.பொ.த (உ.த) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) (அ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று அல்லது பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு/ மின்னணுவியல்/பல் ஊடக அல்லது ஒலியொளி நுட்பங்கள் ஆகிய துறைகளில் தேசிய தொழிற்பயிற்சி தகைமையின் 5ஆம் (**NVQ Level 5**) மட்டத்திற்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு : எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 03) திட்டமிடல் உத்தியோகத்தர் (கீழ்நிலைத் தரம்) III [U-MT 1(III)]

தகைமைகள்: அரச திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் திட்டமிடல் தொடர்பான பரீட்சையொன்றில் திட்டமிடலாளராக தகைமை பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு : நேர்முகப் பரீட்சை மூலம்

### 04) மேற்பார்வையாளர் (மின்சாரம்) தரம் III [U-MT 1(III)]

தகைமைகள்

1. தொழிநுட்பம் தொடர்பான தேசிய சான்றிதழ் அல்லது சமமான தகைமையுடன் மூன்று (3) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். (கற்கைநெறியை மேற்கொள்ளும் காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல் போதுமானது.)

   அல்லது

2. க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் அல்லது அரச/ மாகாண சபை நிறுவனமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றில் உரிய துறையில் பரிசோதகராக ஐந்து (05) வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு : நேர்முகப் பரீட்சை மூலம்

### 05) தாதியர் தரம் II [U-MT 1(III)]

தகைமைகள்

1. க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

   மற்றும்

2. அரச மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தாதிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு : நேர்முகப் பரீட்சை மூலம்

### 06) பொது சுகாதார பரிசோதகர் தரம் III [U-MT 1(III)]

தகைமைகள : சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

ஆட்சேர்ப்பு : நேர்முகப் பரீட்சை மூலம்

### 07) மின் பணியாளர் (தரம் III) [U-PL 3(III)]

### 08) இரும்பு பொருத்தனர் (தரம் III) [U-PL 3(III)]

### 09) இயந்திரம் திருத்துனர் (தரம் III) [U-PL 3(III)]

மேற்குறிப்பிட்ட இல 07, 08 மற்றும் 09 பதவிகளுக்காக

தகைமைகள் : மேற்கூறப்பட்ட ஒவ்வொரு பதவிகளுக்கு உரிய மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சி நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழில்சார் தகைமை 4ஆம் மட்டத்திற்கு குறையாத சான்றிதழைப் பெற்றிருத்தல். (கற்கைநெறிக்குரிய தேசிய தொழில்சார் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் சமனான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு : பிரயோக பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 10) சாரதிகள் தரம் III [U-PL 3(III)]

தகைமைகள

1. க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

   மற்றும்

2. கனரக வாகனங்களை ஓட்டுவது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரால் அளிக்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்க வேண்டியதுடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டதன் பின் தொடர்ச்சியாக மூன்று வருட அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு : தொழில்சார் பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 11) விடுதி பொறுப்பாளர் மற்றும் சமையற்காரர் (தரம் III) [U-PL 2(III)]

தகைமைகள் :

1. க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் பதவிக்கு பொருத்தமான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழழிநுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழில்சார் தகைமை 2 அல்லது 3 மட்டத்திற்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல். (கற்கைநெறிக்குரிய தேசிய தொழில்சார் தகைமைஉறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் சமனான சான்றிதழ்

   அல்லது.

2. க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் உரிய துறையில் தொழிற் தகைமையுடன் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

ஆட்சேர்ப்பு : தொழில்சார் பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 12) முழுநேர துணை விடுதிக்காப்பாளர் தரம் II (பெண்) [U-MN 3(II)]

தகைமைகள்: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். விடுதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

ஆட்சேர்ப்பு : நேர்முகப் பரீட்சை மூலம்.

### 13) பாதுகாப்பு அதிகாரி தரம் III [U- PL 1(III)]

தகைமைகள்: க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ஆட்சேர்ப்பு : தொழில்சார் பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

**மேற்கூறப்பட்ட இல 01 முதல் 13 வரையிலான பதவிகளுக்கு**

வயது : வயது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு **மேற்படாதவாறும்** இருத்தல் வேண்டும்.

### 14) முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைத்தல்) [U-MN 1(III)]

### 15) முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சிய நிர்வாகம்) [U-MN 1(III)]

மேற்கூறப்பட்ட இல 14 மற்றும் 15 ஆகிய பதவிகளுக்கு

பொது தகைமைகள் :

1. க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ்மொழி, ஆங்கிலமொழி/ ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

   மற்றும்

2. க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல். (பொது அறிவு பத்திரத்தை தவிர)

குறிப்பு :

1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத கணனி மென்பொருள் பாவினை தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை மற்றும் கணனி மென்பொருள் பாவினை தொடர்பான இரண்டு (02) வருட அனுபவமுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. பல்கலைக்கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களினால் பாதுகாப்பு வைப்பொன்றும் வைக்கப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பொது தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ் வரும் விசேட தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைப்பவர்) III தரத்திற்கானது**

விசேட தகைமைகள் :

i. திறன் விருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் கீழ் உள்ள தொழில்துறை கல்லூரி ஒன்றில் அல்லது தொழிநுட்ப கல்லூரியில் கணக்கீட்டு கற்கைகள் தொடர்பான தேசிய சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அளிக்கப்படுகின்ற அதற்கு நிகரான தகுதியொன்று பெற்றிருத்தல்.

ii. க.பொ.த (உ.த) பரீட்சையில் வணிகப்பிரிவில் ஒரே தடவையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

**முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சிய நிர்வாகம்) III தரத்திற்கானது**

விசேட தகைமைகள் : களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒரு வருட அனுபவத்துடன் க.பொ.த (சா.த) பரீட்சையில் வணிக பாடத்தில் சித்தியடைதல் அல்லது க.பொ.த (உ.த) பரீட்சையில் கணக்கீடு பாடத்தில் சித்தியடைதல்

ஆட்சேர்ப்பு : எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையின் மூலம்.

வயது : வயது 18 இற்கு குறையாமலும் 30 இற்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்குமான சம்பள அளவு :-

| | |
|---|---|
| U-MN 3 (II) | - ரூபா. 71,365 - 18 X 1,190 – 92,785 (மாதாந்தம்) |
| U-MT 1 (II) | - ரூபா. 57,435 - 7 X 640; 9 X 890 – 69,925 (மாதாந்தம்) |
| U-MT 1(III) | - ரூபா. 51,095 - 7 X 540; 10 X 640 – 60,575 (மாதாந்தம்) |
| U-MN 1(III) | - ரூபா. 49,475 - 17 X 540 – 58,655 (மாதாந்தம்) |
| U-PL 3(III) | - ரூபா. 48,005 - 16 X 490 – 55,845 (மாதாந்தம்) |
| U-PL 2(III) | - ரூபா. 44,575 - 16 X 490 – 52,415 (மாதாந்தம்) |
| U-PL 1(III) | - ரூபா. 42,775 - 16 X 450 – 49,975 (மாதாந்தம்) |

இப்பதவிகளுக்கு அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் https://ou.ac.lk எனும் பல்கலைக்கழக வலைத்தளத்தில் (https://ou.ac.lk/staff-resources/ இல் Establishment Division இன் கீழ் காணப்படும் Application Non-academic) அல்லது இப்பல்கலைக்கழகத்தின் கல்விசாரா தாபனப் பிரிவிற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்விசாரா தாபனப்பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட எனும் முகவரியில **2025.11.21 ஆம் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

அரச திணைக்களங்கள் / அரச கூட்டுத் தாபனங்கள் / சுயாதீன ஆணைக்குழுவில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அத் திணைக்களம் / கூட்டுத் தாபனங்கள் / ஆணைக்குழு வின் தலைவரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும்.

தேவையான தகவல்களை குறிப்பிடாமல் விடுதல், தெளிவற்றதாக இருத்தல், சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காமல் இருத்தல், விண்ணப்பங்கள் உரிய திகதிக்குப் பின்னர் கிடைத்தல் அல்லது வேறு ஏதேனும் தேவைப்பாட்டை நிறைவேற்றாமல் இருத்தல் விண்ணப்பங்களை நிராகரிக்க காரணமாக அமையும். எந்தவொரு விண்ணப்பப்பத்திரமும் நிராகரிக்கப்பட்டதற்குப் பின்னர் எந்தவொரு காரணத்திற்காகவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட
02.11.2025

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL